2012 அக்டோபர் 31]

தவிர்ப்பதற்கு செயல்முறைக் கருவிகள், சாலைத் தடுப்பான்கள், குறியீட்டுப் பலகைகள், அதிவேகம் கண்டறியும் கருவிகள் என அதற்குண்டான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதற்கு நிதிகளைக் கொடுத்து தற்போது அந்தப் பொருட்கள் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே, போக்குவரத்துத் துறையினுடைய அலுவலர்களிடத்திலே வழங்கப்பட்டு சிறப்பான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

அவசர சிகிச்சைப் பிரிவு

*__1110__—**திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கம்பம் அரசு மருத்துவமனையில் இரண்டு படுக்கை வசதி கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவு கட்டி முடிக்கப்பட்டு 21-6-2011 முதல் செயல்பட்டு வருகிறது என்பதை உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம்-குமுளி தேசிய நெடுஞ்சாலையில் ஆயிரக்கணக்கான ஐயப்ப பக்தர்கள் சபரி மலைக்கு சென்று வரும் மிகவும் முக்கியமான இடத்தில் கம்பம் அரசு*

மருத்துவமனை அமைந்திருக்கின்றது. தேசிய நெடுஞ்சாலை மற்றும் மலைப் பாதைகளில் ஐயப்ப பக்தர்கள் அவர்தம் வாகனங்களில் செல்லுகின்றபோது விபத்து ஏற்பட்டு அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சை தருவதற்குண்டான மருத்துவ வசதி கம்பம் மருத்துவமனையில் இல்லாத காரணத்தினால் 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஆண்டிப்பட்டி மருத்துவக் கல்லூரிக்கும், 120 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கும் பாதிக்கப்பட்டவர்களை அனுப்புவதில் ஏற்படுகின்ற காலதாமதத்தால் உயிரிழப்பு ஏற்படுகின்றது. அந்த உயிரிழப்பைத் தவிர்க்கின்ற வகையில் கம்பம் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு ஒன்றைத் துவக்குவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் அரசு பொது மருத்துவமனை தற்பொழுது 98 படுக்கைகளைக்கொண்ட மருத்துவமனையாகத் திகழ்கிறது. கேரள மாநிலத்தை ஒட்டியுள்ள இம்மருத்துவமனையில் சராசரியாக 1,000 வெளிநோயாளிகளும், 90 முதல் 110 வரை உள்நோயாளிகளும் பயன்பெற்று வருகிறார்கள். பல் மருத்துவம், சித்தா, பால்வினை நோய் பிரிவு, ICDS, மகப்பேறு பின்கவனிப்புப் பிரிவு ஆகியவை அங்கு உள்ளன. தற்போது அவசரகால மகப்பேறு மற்றும் சிசு பராமரிப்புப் பிரிவும் உள்ளது. Poison treatment-விஷ முறிவுப் பிரிவு 4 படுக்கை வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் அவசரச் சிகிச்சைப் பிரிவு இரண்டு படுக்கை வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு 21-6-2011 முதல் பயன்பாட்டில் உள்ளது. வருங்காலத்தில் மக்களின் பயன்பாட்டிற்கேற்ப கூடுதல் படுக்கை வசதிகள் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2012 அக்டோபர் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 இல் 500 சாலை விபத்துகளில், அவசரச் சிகிச்சைக்காக 3,900 பேர்களும், அதைப்போல மேல் சிகிச்சைக்காக 390 பேர்களும், 2012-2013 இல் 400 சாலை விபத்துகளில் 4,090 பேர் அவசரச் சிகிச்சைக்காகவும், 350 பேர் மேல் சிகிச்சைக்காகவும் ஆண்டிப்பட்டி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிற இந்த நிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எனது இந்த மெய்யான, உண்மையான கோரிக்கையைக் கருத்தில்கொண்டு, இல்லையென்று மறுக்காது, அவசர முக்கியத்துவம் வாய்ந்த, அவசியம் நிறைந்த விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவை அங்கு துவக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்குக் கருத்துரு பெற்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஓர் அறிவிப்பு இருக்கிறது. நான் படித்துவிடுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பிறகு பேசலாம், உட்காருங்கள். ஓர் அறிவிப்பு இருக்கிறது. படித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம். எனக்குத் தெரிகிறது. (குறுக்கீடுகள்)*